**திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் வட்டத்திற்குட்பட்ட சாத்தனூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் ரூ.7 லட்சத்து 39 ஆயிரத்து 686 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இல.நிர்மல் ராஜ் இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.**

திருவாரூர் மாவட்டம் கூத்தாநல்லூர் வட்டத்திற்குட்பட்ட சாத்தனூர் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் நேர்காணல் முகாமில் ரூ.7 லட்சத்து 39 ஆயிரத்து 686 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இல.நிர்மல் ராஜ் இ.ஆ.ப.,அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது…

தமிழக அரசானது பல்வேறு நலத்திட்டங்களை தீட்டி செயல்படுத்தப்படுகிறது. அதன்படி கருவில் தொடங்கி முதுமை காலம் வரை அரசின் நலத்திட்டங்களை பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. கர்ப்பிணி பெண்களுக்கு டாக்டர் முத்துலெட்சுமி மகப்பெறு நிதியுதயானது பிறக்கும் குழந்தை மற்றும் கர்ப்பிணி தாய்க்கு உதவியாக இருக்கும் வகையில் வழங்கப்படுகிறது.உழவர் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் விபத்தில் உயிரிழந்தால் ரூ.1 லட்சம் வரை நிதியுதவி வழங்கப்பட்டு வருகிறது. குழந்தை திருமணம் நடைபெற உள்ளது என்ற தகவல் கிடைத்தவுடன் உடனடியாக சமூக நலத்துறை மூலம் அத்திருமணம் தடுத்துத் நிறுத்தப்பட்டு சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

இம்மாவட்டமானது முழுக்க முழுக்க விவசாயம் சார்ந்த மாவட்டமாகும். கடந்த ஆண்டு இந்தியாவிலேயே நமது மாவட்டத்தில் மட்டும்தான் அதிகமாக பயீர்காப்பீட்டு தொகை மூலம் விவசாயிகள் பயன் பெற்று உள்ளனர். இவ்வாண்டு குறுவைக்கு விவசாயிகள் பயிர்காப்பீடு செலுத்த அறிவுறுத்தப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் அவர்களின் குடிமரமத்து திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு சிறப்பாக குடிமரமத்து பணிகள் மேற்கொண்டு நீர் நிலைகள் தூர்வாரப்பட்டது. அதன்படி இவ்வாண்டும் விவசாயிகள் ஒத்துழைப்போடு குடிமரமத்து பணிகள் மேற்கொள்ள பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் இம்மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் 2200 பண்ணைக்குட்டைகள் ரூ.22 கோடி மதிப்பீட்டில் அமைக்க

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஒப்புதலோடு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி இம்மாவட்டத்தில் 10 ஒன்றியங்களுக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டு பண்ணைக்குட்டைகள் அமைக்கப்பட உள்ளது. இத்திட்டத்தை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இதன்மூலம் நிலத்தடி நீர் செறிவூட்ட மிகவும் உதவியாக இருக்கும். பொதுமக்கள் தமிழக அரசின் நலத்திட்டங்கள் பெற துறை சார்ந்த அலுவலர்களை தொடர்புக்கொண்டு நலத்திட்டங்களை பெற்று பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.இல.நிர்மல் ராஜ் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

அதனைத்தொடர்ந்து வருவாய்த்துறை சார்பில் 16 நபர்களுக்கு ரூ. 2 லட்சத்து 46 ஆயிரத்து 650 மதிப்பில் விலையில்லா வீட்டுமனைப்பட்டாவும்,09 நபர்களுக்கு பட்டா மாற்றம் ஆணையும்,13 நபர்களுக்கு ரூ. 13 ஆயிரம் மதிப்பில் உழவர் பாதுகாப்புத்திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகைக்கான ஆணையும்,13 நபர்களுக்கு கனிணி சிட்டா நகலும்,6 நபர்களுக்கு மின்னணு குடும்ப அட்டையும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுப்பாண்மையின் நலத்துறை சார்பில் 2 நபர்களுக்கு ரூ.10 ஆயிரத்து 36 மதிப்பில் விலையில்லா சலவை பெட்டியும், வேளாண்மைத்துறை சார்பில் 7 நபர்களுக்கு ரூ.7 ஆயிரத்து 500 மதிப்பில் கைத்தெளிப்பான் உள்ளிட்ட வேளாண் ஈடுப்பொருட்களும் , தாட்கோ மூலம் 1 நபருக்கு ரூ.4 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பில் வங்கி நிதியுதவியுடன்கூடிய டாடா ஏசியி நான்கு சக்கர வாகனமும் ஆக மொத்தம் 67 நபர்களுக்கு ரூ. 7 லட்சத்து 39 ஆயிரத்து 686 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திருமதி.தெய்வநாயகி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக முதுநிலை மண்டல மேலாளர் திரு.ரவிசந்திரன், துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்)திரு.ரெங்கநாதன், சுகாதாரத்துறை இணை இயக்குநர் மரு.உமா, பொது மருத்துவம் மற்றும் சுகாதாரத்துறை துணை இயக்குநர் மரு.செந்தில்குமார், வருவாய் கோட்டாட்சியர் திருமதி.பத்மாவதி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.ரவீந்திரன், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.ஸ்டெல்லா டார்லிங், தாட்கோ மாவட்ட மேலாளர் திரு.அன்பழகன், வட்டாட்சியர் திருமதி.செல்வி மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.